# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2019 யூலை

## (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

---

இவ்வினாப்பத்திரத்தின் நோக்கம், பாடத்தின் சகல பரப்புகளினதும் ஒட்டுமொத்த அறிவைப் பரீட்சிப்பதாக இருந்தது. ‘‘வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்’’ தொடர்பான நடைமுறை நிலைமைகள்கூட பரீட்சிக்கப்பட்டன. பரீட்சகரின் அறிக்கையினுடைய பிரதான நோக்கம், எதிர்காலப் பரீட்சைகளில் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் பரீட்சார்த்திகளால் குறைவான புள்ளிகள் பெறப்பட்ட பாடப் பரப்புகள் மீது கவனத்தைச் செலுத்துவதாகும்.

மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளைத் தவிர, ஏனைய பரீட்சார்த்திகளால் இப்பரீட்சையில் நன்றாக விடையளிப்பதற்கு முடிந்திருந்தது. விடைகளிலிருந்து அவதானிக்கப்பட்ட பொதுவான ஒரு சில பலவீனங்கள் கீழே தரப்படுகின்றன:

### <u>பகுதி A</u>

### வினா இல. 01

இந்தப் பிரிவின் மூலம், வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பாடத்தின் முழுப் பகுதியும் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். மொத்தமுள்ள 100 புள்ளிகளில் 40 புள்ளிகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் பெரும்பாலான பரீட்சார்த்திகள் 20 இற்கும் 30 இற்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினா இலக்கங்கள் **1.4, 1.7, 1.13, 1.15, 1.18** ஆகியவற்றுக்கு வெற்றிகரமாக விடை அளித்திருக்கவில்லை. வினாக்கள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு:

**1.4** பெரும்பாலான பரீட்சார்த்திகள் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் மூலகங்கள் தொடர்பில் அறிவினைக் கொண்டிருக்கவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடைக்குப் பதிலாக ‘‘பங்குகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுவதற்கு அனுமதிக்கப் படுகிறது’’ என்பதைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.7** பெரும்பாலான பரீட்சார்த்திகள் வேலைக் குறிப்பீடு ஒன்றின் கூறினை அடையாளங் காணாததினால் இந்த வினாவுக்காகத் தரப்பட்ட தேர்வுகளிலிருந்து சரியான விடையினை வழங்கியிருக்கவில்லை.

**1.13** அதிகளவான பரீட்சார்த்திகள் பிலிப் கொட்லரின் கூற்றுக்கிணங்க பண்டக்குறியொன்று ஒரு வெற்றிகரமான பண்டக்குறியாக அறியப்படுவதற்கு அது கொண்டிருக்க வேண்டிய பண்பியல்புகளை விளங்கிக் கொண்டிருக்கவில்லை. ஆதலால், பிலிப் கொட்லரின் கோட்பாடு பற்றிய தெளிவான அறிவினைப் பரீட்சார்த்திகள் கொண்டிருத்தல் வேண்டும்.

**1.15** பெரும்பாலான பரீட்சார்த்திகள் நிறுவனமொன்றுக்கான சூழல் தாக்க விருதுக்கான தரச் சான்றிதழை அடையாளங் கண்டிருக்கவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் விடை இல. 04 இற்குப் பதிலாக விடை இல. 01 இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.18** அதிகளவான பரீட்சார்த்திகள் தேசிய சேமிப்பு வங்கியை வர்த்தக வங்கி ஒன்றுக்கான ஓர் உதாரணமாகக் குறிப்பிட்டிருந்தனர்.

பரீட்சார்த்திகள் சுய கற்றல் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள் மீதான தங்களுடைய அறிவை மேம்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலே குறிப்பிட்ட வினாக்களைத் தவிர ஏனைய வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர்.

## பகுதி B

இப்பகுதியானது விடையளிப்பதற்காக 04 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. அவை ஒவ்வொன்றுக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டிருந்தன.

### வினா இல. 02

இவ்வினா **வியாபாரத்தின் வகைகள், தொடர்பாடல்** மற்றும் **போக்குவரத்து** ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**பகுதி (a)** பங்குடமையின் அம்சங்கள் இங்கு பரீட்சிக்கப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்குத் திருப்திகரமாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும் சில பரீட்சார்த்திகள் அம்சங்கள் பற்றி விபரித்திருக்கவில்லை.

**பகுதி (b)** **(i)** இங்கு தொடர்பாடலின் பண்புகள் பரீட்சிக்கப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்குத் திருப்திகரமாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(ii)** போக்குவரத்து அம்சங்கள் இங்கு பரீட்சிக்கப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்குத் திருப்திகரமாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். இப்பகுதிக்கு விடையளிக்கத் தவறியவர்கள் போக்குவரத்து நிலைகள் பற்றி எழுதியிருந்தனர். எனவே பரீட்சார்த்திகள் விடையளிப்பதற்கு முன்னர் வினாவை நன்கு வாசித்து, விளங்கிக்கொள்ள வேண்டும்.

### வினா இல. 03

இங்கு வியாபார நிறுவனம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது.

**பகுதி (a)** பரீட்சார்த்திகள் வியாபார நிறுவனத்தின் அம்சங்கள் பற்றி எழுதியிருந்ததுடன் பெரும்பாலானவர்கள் இப்பகுதிக்குரிய முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (b)** இப்பகுதி போட்டரின் பெறுமதிச் சங்கிலியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் போட்டரின் பெறுமதிச் சங்கிலியில் உள்ள முதன்மை நடவடிக்கைகள் மற்றும் ஆதரவு நடவடிக்கைகள் பற்றிய விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. மிகச் சில பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் முதன்மை நடவடிக்கைகளையும் ஆதரவு நடவடிக்கைகளையும் வரிசைப்படுத்தியிருந்த போதிலும் அவற்றை விபரித்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் முதன்மை நடவடிக்கைகளை ஆதரவு நடவடிக்கைகளாகவும் ஆதரவு நடவடிக்கைகளை முதன்மை நடவடிக்கைகளாகவும் மாறி மாறி எழுதியிருந்தனர். இது பரீட்சார்த்திகள் நிறுவனமொன்றின் செயற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பில் தங்களுடைய அறிவை வலுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதைக் காட்டுகிறது. இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்தவர்கள் தெளிவற்ற விடைகளை வழங்கி யிருந்ததுடன் மொத்தமாகவிருந்த 6 புள்ளிகளில் 2 – 3 புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 04

இது மனித வள முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் மொத்தமாகவுள்ள 10 புள்ளிகளில் 6 – 8 வரையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**பகுதி (a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் மனித வள முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகள் பற்றி விளங்கிக் கொண்டிருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆயினும் சில பரீட்சார்த்திகள் அவர்களின் பொது அறிவினைக் கொண்டு வினாவுக்கு விடை அளித்திருந்தனர். இன்னும் சில பரீட்சார்த்திகள் மனித வள முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகளை எழுதுவதற்குப் பதிலாக முகாமைத் தொழிற்பாடுகளை எழுதியிருந்தனர்.

**பகுதி (b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் மனித வள முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகளைச் சரியாக விபரித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆயினும், ஏனைய பரீட்சார்த்திகள் நன்றாக விபரிக்காது சிறிய விபரிப்பையே வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகளை விபரித்திருந்தனர்.

## வினா இல. 05

இங்கு சந்தைப்படுத்தல் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் மொத்தமாகவுள்ள 10 புள்ளிகளில் 5 தொடக்கம் 6 புள்ளிகள் வரை பெற்றிருந்தனர். இவ்வினா காலியில் அமைந்துள்ள 'கிடோ' என்ற உணவகத்தை அடிப்படையாகக் கொண்ட விடய ஆய்வு வினாவாகும்.

**பகுதி (a)**

**(i)** இப்பகுதி 'கிடோ' வின் சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகளைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் விடய ஆய்வில் தரப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு மாறிகளை விபரிக்கத் தவறியிருந்ததன் காரணமாக முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

**(ii)** இப்பகுதி 'கிடோ' வின் உணவுச் சங்கிலிக்கான 'இலக்குச் சந்தைப்படுத்தல் அணுகுமுறை' பற்றிப் பரீட்சித்திருந்தது. சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் சந்தைப்படுத்தல் அணுகுமுறைகள் பற்றிய அறிவின்மை காரணமாக வினாவை விளங்கிக் கொள்ளாது வேறுபட்ட விடயங்களை எழுதியிருந்தனர்.

**பகுதி (b)** இப்பகுதி நிலைப்படுத்தல் தந்திரோபாயத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் 'நிலைப்படுத்தல்' என்ற பதத்தினை அடையாளங் காணத் தவறியதன் காரணமாக சரியாக விடையளிக்கத் தவறியிருந்ததுடன் குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்தனர். பெரும்பாலான மாணவர்கள் நிலைப்படுத்தல் என்பதை இடம் / அமைவிடம் எனக் கருதி விடையளித்திருந்தனர்.

## பகுதி C

இப்பகுதி 20 புள்ளிகளுக்காக 01 கட்டாய வினாவைக் கொண்டுள்ளது.

### வினா இல. 06

இது **ஈசி சொப்ற்** தொடர்பான விடய ஆய்வு அடிப்படையில் அமைந்த ஒரு வினாவாகும். இங்கு தகவல் முகாமைத்துவம் மற்றும் பூகோளமயமாதல் பற்றிய அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் அவர்களில் பலர் மொத்தமாகவுள்ள 20 புள்ளிகளில் 10 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**பகுதி (a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் PEST பகுப்பாய்வைப் பயன்படுத்தி ஈசி சொப்ற் வியாபாரச் சூழலை தெளிவாக மதிப்பீடு செய்திருந்ததுடன் அதற்கு மொத்தமாக ஒதுக்கப்பட்ட 6 புள்ளிகளில் பெரும்பாலானவற்றைப் பெற்றிருந்தனர். ஆயினும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தைக் கருத்திற் கொள்ளாது PEST பகுப்பாய்வினை விபரித்திருந்தனர்.

**பகுதி (b)** இவ்வினா ஈசி சொப்ற் இன் SWOT பகுப்பாய்வு பற்றிய அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்த்திருந்தது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் விடயத்தை நன்றாக விளங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் எதிர்பார்க்கப்பட்ட விடைகளை அளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (c)** இவ்வினா நல்ல தகவலின் பண்பியல்புகள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (d)** இந்தப் பகுதி ஈசி சொப்ற் இன் ERP மென்பொருளை அடிப்படையாகக் கொண்டதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் ERP சம்பந்தமான அறிவின்மை காரணமாக இப்பகுதிக்கு விடையளிக்கத் தவறியிருந்தனர். மிகச் சில பரீட்சார்த்திகளே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (e)** இங்கு இலத்திரனியல் வர்த்தகம் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டது. சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாது விடையளித்திருந்ததுடன் இலத்திரனியல் வர்த்தகத்தின் **வெற்றியைப்** பாதிக்கின்ற பிரதான காரணிகளை எழுதுவதற்குப் பதிலாக இலத்திரனியல் வர்த்தகத்தின் தாக்கத்தை எழுதியிருந்தனர்.

- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற் கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்**

1. வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்க ஆரம்பிப்பதற்கு முன் பரீட்சார்த்திகளுக்காகத் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.

2. இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகத்தினால் வெளியிடப்பட்ட **சுய கற்றல் புத்தகம்** முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கி சிறந்த வழிகாட்டல்களை வழங்கியிருப்பதால் அதிலிருந்து உச்சபட்ச பயனைப் பெற்றுக்கொள்க.

3. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.

4. விடையளிக்கும்போது நேர முகாமைத்துவம் முக்கியமானது.

5. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

6. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

7. வினாப்பத்திரத்திலேயே விடைகளை எழுதி அதனை விடைத்தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டாம்.

8. கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளித்துப் பயிற்சி பெறுவதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கும்.

9. அறிவினை நிகழ்நிலைப்படுத்திக் கொள்வதற்காக அண்மையில் பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகைகள், கையேடுகள், பாடப்புத்தகங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துக.

10. வினாக்களுக்கு விடையளிக்காது இருப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். இப்பழக்கம் குறைந்த புள்ளிகளையே பெறுவதற்கு வழிவகுக்கும்.

11. நல்ல முன்னாயத்தத்துடன் பெரும்பாலும் பரீட்சையில் சித்தியடையும் நம்பிக்கையுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -